

# திறவுகோல்

புரட்டாசி 2049
மாத இதழ்

விளைநிலமா? விலைநிலமா?

தாய்மொழி கல்வி

சட்டம் 377

குழந்தையாக மாறுவோம்!!!

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# வணிக மருத்துவம்



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

‘‘அண்டத்திலுள்ளதே பிண்டம்
பிண்டத்திலுள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமு மொன்றே
அறிந்து தான் பார்க்கும் போதே’’

என ஆசான் திருமூலர் தன் பாடலில் குறிப்பிடுகிறார். அதாவது இந்த அண்ட வெளியின் இயக்கமும் நம் உடலின் இயக்கமும் ஒன்று தான் என்கிறார். எப்படி நீர், நெருப்பு, காற்று, மண், ஆகாயம் என இணைத்து இந்த அண்டவெளி செயல்படுகிறதோ, அப்படியே தான் மனிதனின் இயக்கமும் வாதம், பித்தம், கபம், உடல், செயல் என இணைந்து செயல்படுகிறது.

அக்காலத்தில் வானவியல் தெரிந்தவர்கள் தான் மருத்துவமும் பார்த்தார்கள். அவர்களுக்கு அண்டமும் பிண்டமும் ஒன்று தான். அதை சார்ந்து தான் தங்கள் மருத்துவமும் இருந்தது. அது பிணிக்கான மருத்துவம் அல்ல. உடலை சீராக இயங்க வைக்க தேவையான மருத்துவம். அக்காலகட்டத்தில் தற்போதுள்ளது போன்ற பிணி என்பதே கிடையாது. வாத பித்த கபத்தால் உடலுறுப்புகளின் செயல்பாட்டில் ஏற்படும் மாறுபாடு. இயற்கை சீற்றங்கள் மற்றும் அன்றாட வாழ்வில் ஏற்படும் காயங்கள் தான் இருந்தன. அதனை சீர் செய்ய தான் மருத்துவம் பார்க்கப்பட்டது.

இதையே தான் டார்வீன் தன்னுடைய பரிணாம கொள்கைகளிலும் கூறுகிறார். ‘‘பல உயிர்களிடத்திலிருந்து பரிணாம வளர்ச்சி கண்டே மனித இனம் உருப்பெற்றுள்ளது’’, ‘‘அதேபோல் சூழலை பொறுத்து தன்னை தக்கவைத்து கொள்ளும் உயிரே இங்கு நிலைக்கிறது, அப்படி தான் மனித இனம் நிலைபெறுகிறது’’. அதாவது ஒற்றை செல்லான அமீபாவிலிருந்து பல பரிணாம வளர்ச்சியுற்ற செல்லாகி, முதல் உயிர் கடலில் மீனாக உருவாகியுள்ளது, இந்த மீன் மேலும் மேலும் பரிணாம வளர்ச்சி பெற்று நிலத்தில் வாழும் உயிராக மாறி, அடுத்தாக அவ்வுயிர் குரங்காக பரிணாம வளர்ச்சி பெற்று இறுதியாக மனிதனாக மாறியுள்ளது. இந்த மனித இனமும் நம்முடைய சூழலை தக்கவைத்து கொள்ளும்வரை மனிதனாக வாழும். சூழலை சார்ந்து இயங்கா நிலை வரும் பொழுது நாமும் வேறு உயிராக பரிணாம வளர்ச்சி பெறுவோம் என்கிறார்.

இங்கு டார்வின் சொல்லும் சூழல் மற்றும் உயிர் என்பதைத்தான், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆசான் திருமூலர் ‘‘அண்டமே பிண்டம்’’ என்றார். நாம் நம்முடைய சூழலோடு ஒன்றி வாழும் பொழுது நலமாக வாழலாம் மாறாக சூழலை மீறி வாழும் பொழுது பிணிக்கு ஆட்பட்டு நம்மை நாமே இழக்க நேரிடும். நாம் நம்முடைய இயற்கையை அழித்துக்கொண்டும், இயற்கைக்கு மீறிய செயற்கைகளை தொடர்ந்து பயன்படுத்தும் பொழுதும் இவ்வுலகில் நிழலும் தட்பவெப்ப சூழலும் மாறும். இதனால் மனித இயக்கமும் மாறும் என்பதே நாம் புரிந்து கொள்ள வேண்டிய அடிப்படை.

அண்டார்டிகாவில் வாழும் கரடியால் நம் நிலத்தில் வாழ இயலாது. அதேபோல் தான் நம் நிலத்தில் வாழும் கரடியால் அண்டார்டிகாவில் வாழ இயலாது. அண்டார்டிகாவில் வாழும் கரடியின் உடலமைப்பு அங்குள்ள சூழல் தட்பவெப்பத்தை பொறுத்து அமைகிறது. அதேபோல் தான் இங்கு வாழும் கரடிக்கு இங்குள்ள சூழல் தட்பவெப்பத்தை பொறுத்து உடலமைப்பு இயற்கையாக அமைகிறது. இதேபோல் தான் மனித உடலமைப்பும். இந்த வாழ்வியலில் ஏற்பட்ட மாறுதல்களால் தான் இங்கு பிணிகள் அதிகமாகின.

பண்டைய மனிதர்கள் நாளடைவில் குழுக்களாக வாழ ஆரம்பித்து அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட போர்கள், சுரண்டல், தோற்றவர்களை இடம்பெயர்வித்து அடிமைகளாக்கி ஆரோகியமற்ற சூழலில் அவர்களை வாழவைத்தது, அதே போன்று விலங்குகளின் வாழ்விடங்களை மற்றும் அவற்றை முறையற்று அழித்தது போன்ற காரணங்களால் பிணிகள் வர ஆரம்பித்தன. இச்சூழலியல் மாறுப்பாட்டால் கொடும் நோய்களான பிளேக், காலரா, அம்மை, நிமோனியா போன்ற பிணிகள் உருவாகி அதனை சீர் செய்ய உலகம் முழுதும் இருந்த பல மருத்துவ முறைகள் தங்களுடைய சூழல் தட்பவெட்பம் உணவு முறை வாழ்க்கை முறையை கொண்டு மருத்துவம் செய்து மக்களை பிணிகளிலிருந்து காப்பாற்றி வந்தனர்.

அப்படி செயல்பட்ட மருத்துவ முறைகள் சித்த மருத்துவமுறை, ஆயுர்வேதம், எகிப்திய மருத்துவமுறை, கிரேக்க மருத்துவ முறை, சீன மருத்துவமுறை என எண்ணற்ற பாரம்பரிய மருத்துவ முறைகள். இம்முறைகள் அந்தந்த மக்களுக்கு தேவையான மருத்துவத்தை வழங்கி மக்களை பிணியிலிருந்து காத்து வந்தன. காலத்திற்கு ஏற்ப தன்னை மேம்படுத்தி கொண்டு வந்தன. இதன் அடுத்தகட்டமாக 17ம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாபெரும் காலனியாதிக்கமும், 18ம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாபெரும் தொழிற்வளர்ச்சியும் இணைந்து மக்களின் வாழ்க்கை முறை, உணவு பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை மாற்ற ஆரம்பித்தன, அதேபோல் தொழிற்சாலைகள் மற்றும் இன்னபிற சுரண்டல்களால் சுற்றுசூழலும் பாதிப்படைய ஆரம்பித்தன. இதன் நீட்சியாக பிணிகள் உருவாகி அதற்க்கான மருத்துவ முறைகளும் அந்தந்த பகுதிகளில் மேம்பட ஆரம்பித்தன.

கிரேக்க மருத்துவமுறைகளை பின்பற்றி தங்களுடைய மருத்துவத்தை அமைத்து கொண்ட ஆங்கிலேயர்களும் இத்துறையில் பல பல கண்டுபிடிப்புகளை செய்து, நோய்கான காரணங்கள், அதனை உண்டாக்கும் நுண்ணுயிரிகள், அதனை சரி செய்யும் மருத்துவமுறை என அறிவியலின் துணைக் கொண்டு அவர்களின் மருத்துவமுறையை மேலும் சிறப்பாக்கினர். அக்காலகட்டத்தில் உச்சபட்சமாக அறுவை சிகிச்சை முறை, நோய்களுக்கான தடுப்பு மருந்துகள், உறுப்பு மாற்று சிகிச்சை என பல முன்னேற்றங்களை இத்துறையில் புகுத்தினர்.

அதே காலகட்டத்தில் உலகின் பெருவாரியான பகுதிகளை தங்களுடைய காலனியாதிக்கத்தில் வைத்திருந்த ஆங்கிலேயர்கள் அப்பகுதிகளில் தங்களுடைய சுரண்டல்களால் இயற்கை சூழலை சிதைத்தும், உயிரினங்களின் வாழ்வியலை அழித்தும், மக்களை அடிமைகளாக்கி அவர்களை சுகாதாரமற்ற சூழலில் வாழவைத்தும் அந்தந்த பகுதியின் நோய் பெருக்கத்திற்கு காரணமாகினர். அதே நேரத்தில் அந்நோய்களை அவர்களின் மருத்துவமுறைகளை கொண்டு சீர்ப்படுத்தியும் வந்தனர்.

அந்தந்த பகுதிகளில் தற்சார்பாக வாழ்ந்து வந்த மக்களின் வாழ்வியலை குறுகிய காலத்தில் பெரிதாக மாற்றியது ஆங்கிலேயர்களின் காலனியாதிக்க காலம் தான். உழவு முறை, உற்பத்தி, உணவு பழக்க வழக்கங்கள் என அனைத்தையும் மாற்றினர். இந்த மாறுதல்களை ஏற்றுக்கொள்ளாத மனிதனின் உடல்கள் புதிய புதிய பிணிகளால் பாதிக்கப்பட்டன. அதேபோல் விலங்குகளும் பாதிக்கப்பட்டு அவற்றின் மூலமும் மனிதனுக்கு பிணிகள் பரவின. புதுப்புது நுண்ணுயிர்கள் உருவாகி மனிதனை அவையும் பிணிக்குள்ளாகின. கூடவே உழவு உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் சுரண்டல்களால் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் உணவின்றி சத்துக்குறைபாடுடையவர்களாக மாறினர். பலர் பஞ்சத்தால் இறந்தனர். இதன் மூலம் ஏற்பட்ட சுகாதார கேடினாலும் பல பிணிகள் உருவாகின.

இப்படி உருவான புதுப்புது பிணிகளை போக்க ஏனைய மருத்துவமுறையை விட ஆங்கிலேய மருத்துவமுறைகளே உடனடி நிவாரணம் அளித்தன. இதனால் பெருவாரியான மக்கள் தங்களுடைய பாரம்பரிய மருத்துவமுறைகளிலிருந்து விலகி ஆங்கிலேய மருத்துவமுறைக்கு மாறும் சூழல் ஏற்பட்டது. அக்காலகட்டத்தில் பாரம்பரிய மருத்துவம் செய்தவர்களையும் ஆங்கிலேயர்கள் முறையான படிப்பின்றி செய்வதாக கூறி அவர்களின் மருத்துவத்தை செய்ய அனுமதிக்கவில்லை. இதனால் மருத்துவத்தை பார்த்தவர்கள் அதனை அடுத்த தலைமுறைக்கு முறையாக கடத்த இயலவில்லை. இப்படியாக பல மருத்துவ முறைகள் தன்னை மென்மேலும் வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பை அக்காலகட்டத்தில் இழந்தன.

இதன்பிறகாக 19ம் நூற்றாண்டில் ஏற்பட்ட போர்கள், தொழில் வளர்ச்சி என ஏற்பட்ட சூழலியல் மாறுதல்களால் ஏற்படும் பிணிகளை உடனடியாக சரிசெய்ய ஆங்கில மருத்துவமுறை மட்டும் தான் உலகம் முழுதும் இருந்தது. ஆங்கிலேய மருத்துவ முறைகளால் அந்தந்த பகுதி மக்களின் வாழ்நாள் அதிகமாகின. உதாரணமா ஆங்கிலேய மருத்துவ முறை இல்லாதபொழுது தமிழக மக்களின் சராசரி ஆயுள்காலம் 35ல் இருந்தது, ஆங்கிலேய மருத்துவமுறையை பயன்படுத்த ஆரம்பித்த பிறகான சராசரி 65 வயது வரை உயர்ந்துள்ளது. அதேபோல் பிரசவ இறப்பு மற்றும் குழந்தைகள் இறப்பு பெருவாரியாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வளவு இருந்தும் இம்மருத்துவமுறை எங்கு தடம் மாறியதெனில் எங்கெல்லாம் இது வணிகமாக்கப்பட்டதோ அங்கெல்லாம். இன்றும் வணிகமயமாகாத ஆங்கிலேய மருத்துவ முறை பலநாடுகளில் வெற்றிகரமாக செயல்பட்டு கொண்டிருக்கிறது. சுதந்திரத்திற்கு பிறகான இந்தியாவில் இது படிப்படியாக வணிகமயமானது. இதற்க்கு முக்கிய காரணம் இங்குள்ள மக்கள் பெருக்கம். முதலாளிகளுக்கு எங்கு அதிக நுகர்வோர் இருக்கிறார்களோ அவ்விடத்தை முழுவதும் அவர்களின் வணிக எல்லைக்குள் கொண்டுவந்து விடுவார்கள். அபப்டி தான் மருத்துவ நிறுவனங்களுக்கு நம் மக்கள் சிறந்த நுகர்வோராகவும், இந்தியா மிகப்பெரிய சந்தையாகவும் மாறிப்போனது.

தமிழகத்தில் 1980க்கு பிறகான தனியார் மருத்துவமனைகளின் அனுமதிக்கு பிறகு மருத்துவத்துறை மெல்ல மெல்ல வணிகமயமாகின. தனியார் மருத்துவமனைகள் தான்

சிறந்தது அரசு மருத்துவமனை தரமற்றது என்ற சிந்தனை மருத்துவ முதலாளிகளால் பரப்பபப்பட்டது. இந்த சிந்தனை பரவாக்கத்தை கட்டுப்படுத்தாமல் இங்கிருந்த அரசுகளும் அதிகாரிகளும் வேடிக்கை பார்த்தன. அடுத்த 10 ஆண்டுகளில் உலகமயமாக்கல் இந்தியாவில் அறிமுகமானதும், அதனை வலுவாக பிடித்துக்கொண்டு முன்னேறிய தமிழக மருத்துவத்துறை அதனூடாகவே வலுவான வணிக மருத்துவத்தையும் வரவேற்று வளர்த்து ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துவிட்டது.

மருத்துவ வணிகத்தின் தொடர் வருமானம் மற்றும் போட்டியின் மூலம் பெருவாரியான அறமற்ற மருத்துவமுறைகள் இக்காலகட்டத்தில் வளர்ந்துவிட்டன. வேறுவழியில்லா மக்களும் அதனுள் சிக்கி சின்னாபின்னமாகின்றன. இங்குள்ள ஒரு சராசரி மனிதனின் சேமிப்பில் பாதி மருத்துவத்திற்க்கே செல்லும் சூழல் இன்று உருவாகிவிட்டது. அப்படி சேமிப்பை சுரண்டினாலும் அது சரியான மருத்துவமா என்றால் அதுவும் இல்லாமல் அறமற்ற மருத்துவமாகவே இருக்கிறது.

அதேநேரம் இன்றும் ஆங்கிலேய மருத்துவமுறையை பின்பற்றி செயல்படும் அரசு மருத்துவமனைகள் சிறப்பாகவே செயல்பட்டு கொண்டிருக்கின்றன. மருத்துவமனை சுகாதாரத்தை மட்டும் மேம்படுத்தினால் போதும். எனில் ஆங்கில மருத்துவ முறை தான் ஒரே தீர்வா என்றால் கண்டிப்பாக இல்லை. இன்றும் அந்தந்த பகுதிகளின் பாரம்பரிய மருத்துவமுறைகளான சித்தா, சீன, ஓமியோபதி, யுனானி, ஆயுர்வேத மருத்துவ முறைகள் புழக்கத்தில் உள்ளன. அவைகளை தற்கால அறிவியல் முன்னேற்றம், சூழலியல் மாறுபாடு, உணவு பழக்கவழக்கங்கள் என அனைத்தையும் கருத்தில் கொண்டு மேம்படுத்த வேண்டியது முக்கிய பணி. அதனை செய்யாமல் நம் மருத்துவமுறை மட்டுமே சிறந்தது என பேசிக்கொண்டு இம்முறைகளுக்குள்ளாகவும் வணிக நோக்கில் செயல்படும் நிறுவனங்களும் நபர்களும் பெருகி கொண்டு தான் இருக்கின்றனர். கண்மூடி தனமாக அதனை ஏற்று செயல்படாமல் நாம் தான் விழிப்புடன் இருக்க வேண்டும் .

ஒவ்வொரு மருத்துவமுறைகளும் ஒவ்வொரு சிறப்பு கொண்டது, உதாரணமாக நம் மருத்துவமுறை பெரும்பாலும் உணவு மூலிகை வழியே நம்முடைய உடல்நலத்தை பேண உதவுகிறது. இந்தவகையில் நம்முடைய பாரம்பரிய மருத்துவமுறையை நாம் பின்பற்றலாம். அதேநேரம் இவற்றை மீறி ஏற்படும் பிணி மற்றும் இதர மருத்துவ உடனடி தேவைக்கு ஆங்கில மருத்துவத்தையோ அல்லது வேறு மருத்துவ முறைகளையோ பின்பற்ற வேண்டும் . கண்மூடி தனமாக தன்னுடைய முறை மட்டுமே சிறந்தது என எண்ணி கொண்டு மற்ற முறைகளை புறம்தள்ளக்கூடாது. அந்தந்த மருத்துவமுறைகள் அந்தந்த பகுதிகளில் உருவாகி தன்னை மெருகேற்றி கொண்டவை தான். இன்று உலகமே கிராமம் என்று சுருங்கிய நிலையில் அனைத்தில் உள்ள நல்லவற்றையும் நாம் ஏற்றுக்கொள்வது தவறே அல்ல .

சரி நாம் இந்த சூழலில் என்ன தான் செய்ய வேண்டும்.

1. இயற்கையை சுரண்டாமல் அதனை சீராக்க வேண்டும்

2. அதன் மூலம் நம்முடைய சூழல் மற்றும் தட்பவெட்பத்தை மீட்க வேண்டும்.
3. நம் பகுதி உணவு வகைகளை நம்பகுதியிலேயே உற்பத்தி செய்து உண்ண ஆரம்பிக்க வேண்டும்.
4. நம் பாரம்பரிய உணவு பழக்கவழக்கங்கள், மூலிகைகள் கொண்டு வீட்டிலிருந்தே நம் உடலை மேம்படுத்த வேண்டும்.
5. அனைவரும் தத்தம் குடும்பத்திற்காக மீண்டும் குடும்ப மருத்துவரை பார்க்க ஆரம்பிக்க வேண்டும். அவர் அனைத்து மருத்துவ முறையையும் ஏற்பவராக இருக்க வேண்டும். தன் மருத்துவமுறையை மட்டும் கடைப்பிடித்து ஏனைய மருத்துவமுறைகளை புறம் தள்ளுபவராக இருக்க கூடாது.
6. அப்படி ஒருவரை குடும்ப மருத்துவராக்கி கொண்டால் நமக்கு ஏற்படும் பிணிக்கு அவரின் அறிவுரையின் பேரில் அந்தந்த பிணிக்கேற்றாற்போன்ற மருத்துவ முறைகளை அந்தந்த மருத்துவமுறையை முறையாக செய்பவர்களிடம் சென்று மருத்துவம் பார்க்க வேண்டும்.
7. நம்முடைய பாரம்பரிய மருத்துவமுறைகளை தற்கால சூழலுக்கு ஏற்றாற்போல் மேம்படுத்த வேண்டும்.
8. அரசு, அனைத்து மருத்துவமுறைகளையும் ஏற்று அவற்றை முறைப்படுத்தி அதற்கான மருத்துவ படிப்புகள் மற்றும் மருத்துவமனைகளை அமைக்க வேண்டும்.

இவைகள் படிப்படியாக நடக்கும் பட்சத்தில் மருத்துவம் அறமான துறையாக மாறும். இல்லையேல் அனைத்து மருத்துவ முறைகளிலும் வணிகம் புகுந்து நம்மை சீரழித்திடும்.

மீண்டும் டார்வின் அவர்கள் கூற்றை நினைவூட்டுகிறேன். ‘‘பல உயிர்களிடத்திலிருந்து பரிணாம வளர்ச்சி கண்டே மனித இனம் உருப்பெற்றுள்ளது’’, ‘‘அதேபோல் சூழலை பொறுத்து தன்னை தக்கவைத்து கொள்ளும் உயிரே இங்கு நிலைக்கிறது, அப்படி தான் மனித இனம் நிலைபெறுகிறது’’.

சூழலை சீராக்குவோம் நம்மை தக்கவைப்போம். பிற மருத்துவமுறையை புறந்தள்ளாமல் வணிக மருத்துவத்தை புறம்தள்ளுவோம். வணிகம் நம் பாரம்பரிய முறையில் இருந்தாலும் புறம்தள்ளுவோம்.

நன்றி

– ரா.ராஜராஜன், மன்னார்குடி

# இயற்கையின் ரசிகன்..!

இயற்கையின் ரசிகன் நான்...!
அதன் அழகின் கள்வன் நான்...!?

சாயங்கால தூரிகை வானில்..
தீட்டும் வண்ணக்கோலத்தில்...
இதயத்தை இழப்பவன் நான்...!?

தென்னைச் சோலையில்...
தென்றலின் நடுவில்..
கூவும் குயிலிசையில்..
குழந்தையானவன் நான்...!?

ஆகாய கங்கையில்
ஆடி ஆடி நகர்ந்திடும்..
மேகக் கப்பலில்...
மிதக்க நினைப்பவன் நான்...!?

பூமி தன் கருப்பாடை
கலைந்து..
சோம்பல் முறித்து செவ்வாடை அணியும்..
அதிகாலை அழகு கண்டு..
ஆனந்தம் கொள்பவன் நான்..!?

செடியில் பூத்துக் குலுங்கும்..
செம்மலர் செவ்விதழ் கண்டு..
சிந்தனை இழந்தவன் நான்..!?

மலருக்கு மலர் தாவி..
மகரந்தம் பூசும்..
வண்டுகளின் ரிங்காரத்தில்..
வசந்த ராகம் கேட்பவன் நான்..!?

நாணல்களின் நளினத்தில்...
நதியின் சலங்கை ஒலியில்..
நட்சத்திர கண்சிமிட்டலில்..
பூங்காவின் பனியிரவில்...
பூரித்துப் போனவன் நான்...!?

இயந்திர வாழ்விலிருந்து...!
இதயம் விரும்பும் வாழ்விற்கு...!
இயற்கையை நாடுபவன் நான்..!?
--



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி



செ. க. நிரூபன்

# குழந்தையாக மாறுவோம்!!!



திவ்யா வசந்தன்

''குழந்தை'' இந்த வார்த்தையை படித்தவுடன் நமக்குள் ஒரு உற்சாகம் தோன்றுகிறது அல்லவா? மீண்டும் குழந்தை பருவத்திற்கு செல்ல வேண்டும் என்ற எண்ணம் வருகிறது அல்லவா!! கண்டிப்பாக தோன்றும் ஏனென்றால் நாம் கவலை இன்றி சுற்றி திரிந்த காலம் அதுவே. குழந்தை என்ற வார்த்தையை கேட்டவுடன் குழந்தையின் சிரிப்பு, பிஞ்சு நடை, மழலை பேச்சு நமக்கு நினைவிற்கு வரும் அதில் அத்தனையிலும் வார்த்தையால் வர்ணிக்க முடியாத அளவிற்கு அழகு இருக்கிறது.

நான் இந்த தலைப்பை எழுதுவதற்கான காரணம் இன்று நம்மில் பலர் சில நேரங்களில் குழந்தையாக மாற வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதை உணர்த்துவதற்காகவே. ஒரு குழந்தை தன் தாய், தந்தை எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் அவர்களை மனமாற ஏற்றுக் கொள்கிறது, பெற்றோரின் தகுதி, நிறம், தோற்றம் இப்படி எதையும் எதிர்பார்ப்பதில்லை. சிறு வயதில் யார் நம்மை அள்ளி அணைத்தாலும் அவர்களிடம் செல்வோம். ஏனெனில். குழந்தையிடம் ஏற்றத்தாழ்வு, பாரபட்சம் எதுவுமில்லை..

இந்த கட்டுரையின் தலைப்பில் குழந்தையாக மாறவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறேன் அல்லவா? அதற்காக குழந்தை போல் பிஞ்சு நடை, மழலை பேச்சு என்றெல்லாம் மாற வேண்டியதில்லை. குழந்தையின் மனம் போல நம் மனதை மாற்றிக்கொள்ள வேண்டும். பெரியவர்களாக வளரும் நாம் பற்பல பிரச்சனைகள், சோதனைகளை தாண்டி வருகிறோம். இந்த நிலையில் தான் மற்றவரிடம் கோபம், பகை, பொறாமை, ஏற்படுகிறது. நமக்கு ஏற்படும் பிரச்சனையை எதிர் கொள்ள தெரியாமல் சிலருக்கு தவறான எண்ணங்கள் உருவாகி அதுவே அவர்களுக்கு பெரிய பிரச்சனைக்கு வழிவகுக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலையில் குழந்தையாக மாறி யோசித்துப் பாருங்கள். எந்த ஒரு பகையோ, பழிவாங்கும் என்னமோ நமக்கு ஏற்படாது. சும்மாவா சொன்னார்கள்

''குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றங்களை மறந்துவிடும் மனதால் ஒன்று'' என்று ...

சக மனிதரிடம் ஒற்றுமையாக பழகினால் நமக்கு எந்த ஒரு சூழ்நிலையிலும் துணையாக நிற்பார்கள்.

குழந்தைகள் என்றுமே தனித்து தனிமையில் இருப்பதில்லை. அவர்களை சுற்றி யாரவது இருக்க வேண்டும் என்று தான் விரும்புவார்கள். அதை போல் நாமும் நம்மை சுற்றி நல்லவர்களை சேர்த்து கொள்ள வேண்டும். குழந்தை அழுவது என்றாலும்

சிரிப்பது என்றாலும் சத்தமாக வெளிப்படுத்தும். அதை போல நாமும் நம் அழுகை, மகிழ்ச்சி இப்படி அனைத்தையும் வெளிப்படையாக மற்றவரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒருவரிடம் பழகும்பொழுது தகுதி பார்த்து பழக கூடாது. அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் ஏற்று கொள்ள பழகுங்கள். அதுவே உண்மையான அன்பு. குழந்தைகள் இருவர் சண்டையிட்டு கொண்டாலும் சிறிது நேரத்திலே அதை மறந்து சேர்ந்து கொள்வார்கள். நமக்கும் அப்படி வாழ தொடங்கினால் நமது வாழ்க்கை எவ்வளவு அழகாக அமையும் தெரியுமா!!!!


இப்படி பல விடயங்களை நாம் குழந்தையிடம் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

''குழந்தையே நமக்கு ஆசான்''. எதிர் காலத்தை யோசித்து நிகழ்கால சந்தோசத்தை இழக்காமல் வாழுங்கள்.

இவ்வுலகில் வாழும் வரை நல்ல எண்ணங்களை மற்றவர்கள் மனதில் விதைத்து விட்டு செல்லுங்கள். நமது ஞாபகங்கள் அடுத்த தலைமுறைக்கும் மலர்ந்து விரியட்டும்...

குழந்தை போல் மனதை உற்சாகத்துடன், சுறுசுறுப்புடன் வைத்து கொள்ளுங்கள். மனம் அமைதி பெறும்! மகிழ்ச்சி தங்கும்!

- திவ்யா வசந்தன்



R. விஜயகுமார்
12 - B
தேசிய மேல்நிலைப் பள்ளி
மன்னார்குடி

# எது முன்னேற்றம்?

தனிமனிதனில் தான் தொடங்குகிறது முன்னேற்றம். நீ உயர்ந்து முன்னேறி நின்றால் சிறந்த முயற்சியாளன், தான் முன்னேறி பிறரையும் முன்னேற்றினால் அவன் வெற்றியாளன்!

சமூகம் முன்னேற
முதலில் சுய ஒழுக்கம்,
சுய கட்டுப்பாடு இருக்க வேண்டும்.
இன்றைய உலகில் அது இல்லை.
முன்னேற்றத்திற்கான வழி, இங்கு தான் முன்னேறி பிறரையும் முன்னேற்றுவது.
தொழில் முனைவோர் மட்டுமே.

தொழில் முனைவோருக்கு மட்டுமே ஒருமுறை விழுந்தால் மறுபடி எழ முடியும் என்ற தன்னம்பிக்கை உண்டு. தான் செய்த தொழிலைப் பிள்ளை செய்ய கூடாதென்று படிக்க வைத்தார்கள். இன்றைக்கு தொழிலை பன்னாட்டு நிறுவனங்கள் இங்கே செய்து பலகோடிகளை சம்பாதிக்கின்றனர்.

முடித்திருத்துவது (Essensuals, green trends) போன்ற எல்லா துறைகளிலும் இதே தான்.

அடுத்து நாம் செய்வது, வேலைக்கு வெளிநாடு செல்வது. இங்கே பிழைக்க தெரியாதவன், தெரிந்தவனிடம் ஏமாறுவது. பல லட்சங்கள் கட்டி அவனிடம் அடிமையாக வாழ்வதை விட இங்கு சிறந்த தொழில்கள் உண்டு.

இயற்கை முறை விவசாயம், இன்றைய வேகமான வளர்ச்சியில் இயற்கை முறையில் விளைந்த காய், கனிகள் சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. கிராமப்புறங்களில் எளிதாக பெறலாம்.


அருள்பாண்டியன்

வேகமாக வளர்ந்து வரும் ecommerce, digital marketing, flipkart, amazon, shopclus, eBay போன்றவற்றை யார் வேண்டுமானாலும் செய்யலாம்.

தொழில் தொடங்க ஏற்படும் தடைக்கு முதல் காரணம் பெற்றோர்கள் தான். 21 வயது இளைஞன் ஆன பின்பும் கூட சுயமாக முடிவெடுக்க முடியவில்லை. நான் தொழில் செய்கிறேன் என்றால் உனக்கு வயதுமில்லை, அனுபவமும் இல்லை. எதையும் செய்யாமலே எப்படி வரும்?

இங்கு முடியாது என்பது யாதுமில்லை கற்றுக்கொள்ளவில்லை என்பதே நிதர்சனம்.
நீங்கள் பெற்ற பிள்ளைகளை நீங்கள் நம்பவில்லை என்றால் யார் நம்புவார்கள்? நீ செய் என்ற நம்பிக்கை கொடுத்தாலே, அவன் வெற்றி பெறுவான். நம்பிக்கை ஒன்றே இங்கு முன்னேற்றத்திற்கான வழி.

கட்டுரை பற்றிய சந்தேகங்களுக்கு

**அருள்பாண்டியன்**
(தொழில்முனைவர்)

மின்னஞ்சல்: pandiana849@gmail.com
கைப்பேசி: 8973204042
பூவனூர்

# தாய்மொழி கல்வி


மணிபாரதி தங்க சுந்தர்

என்னை தமிழினத்தின் பிள்ளை என உலகிற்கு அடையாளப்படுத்தும் அன்னை தமிழுக்கும்......

இந்த நிலத்தில் பிறந்தமைக்காகவே பெருமைகள் பல தந்த தமிழர் நிலத்திற்கும் என் சிரம் தாழ்ந்த வணக்கம்.

இன்றைய காலக்கட்டத்தில் தமிழ் இளம் தலைமுறைப் பிள்ளைகள் தாய் மொழிக்காகவும் தமிழர் நிலத்திற்க்காகவும் அதிக முக்கியத்துவம் கொடுத்து போராடுவது மகிழ்ச்சியே... ஆனால் அதை தாண்டி நமக்கு மிகப் பெரிய கடமை நம் முன்னே காத்துக்கிடக்கிறது அது என்னவென்றால் நமக்கு அடுத்த தலைமுறைப் பிள்ளைகளுக்கு தாய்மொழி கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி தாய்மொழி கல்வியில் பயில வைப்பது ஆம் பலர் ஆங்கில கல்வியின் மீது கொண்ட மோகத்தாலும், அக்கம் பக்கத்தில் இருப்பவர்களின் பிள்ளை போல் தன் பிள்ளையும் படிக்க வேண்டும் என்று தன்மான பிரச்சனையாக எண்ணி ஆங்கில வழி கல்வியை  பயிற்றுவிக்கும் பள்ளியில் சேர்த்து அதற்கான கட்டணத்தை கட்டமுடியாமல் கடனாளியாக மாறுகின்றனர்....

‘‘கல் தோன்றி மண் தோன்றா காலத்தில் முன்தோன்றிய மூத்த குடி எங்கள் தமிழ் குடி’’ என வரிகளுக்கேற்ப பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மொழி நம் தலைமுறை உடன் அழிந்து விட்டால் வரலாறு நம்மை காரி உமிழ்ந்து விடும்.. ஆங்கிலமும் கிந்தியும் நம் மீது ஏன் இவ்வளவு அக்கறையுடன் திணிக்கப்படுகிறது...ஒரு இனத்தை அழிக்கவேண்டும் என்றால் முதலில் அதன் மொழியை அழிக்கவேண்டும் அதன் தொடர்ச்சியாக இனம் அழிந்துவிடும் ஏனென்றால் ஒரு இனம் தன் தாய்மொழியை பயன்படுத்தும் போது தன் வரலாற்றை படித்து ஒவ்வொரு ஆபத்தான சூழ்நிலையிலும் தன் இருப்பை தக்கவைத்துக் கொள்ளும்... தாய்மொழியை விட்டு வெளியேற்றினால் தான் யார் என்ற வரலாறு தெரியாமல் அடிமையாக அழிந்துபோகும்.

இப்படிபட்ட ‘‘கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று நம் மீது தொடுக்கப்பட்டுள்ளது’’ நம் வரலாறை அறியாது அடுத்த தலைமுறைப் பிள்ளைகள் உருவாகிக்கொண்டு இருக்கிறது.. தாய்மொழி கல்வியை விட ஆங்கில கல்வி சிறப்பானதா..? திறனாய்வு செய்து பாருங்கள் ஆங்கில கல்வி பயிலும் ஒரு மாணவனால் ஆங்கிலம் சரளமாக படிக்கமுடியும் ஆனால் தமிழ் படிக்க தடுமாறுவான்.. தமிழ் வழி கல்வி பயிலும் ஒரு மாணவனால் ஆங்கிலமும், தமிழும் சரளமாக படிக்க முடியும்.. இது எப்படி சாத்தியமாகிறது...? பிறமொழி கல்வி என்பது ஒரு விடயத்தை நமக்கு தெரியவைக்கிறது.. தாய்மொழிகல்வி அந்த விடயத்தை தெளிவாக புரியவைக்கிறது... தாய்மொழியில் கல்வி பயின்றவர்கள் தான் உலகில் பல சாதனைகளை புரிந்து உள்ளனர்..

''தமிழுக்கு அமுதென்று பேர்-அந்த தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்''என்ற பாவேந்தர் பாரதிதாசனின் முழக்கம் நமக்கு உணர்த்துவது ஒன்றைத் தான்..ஒவ்வொரு தமிழனுக்கும் தமிழ் தான் உயிர் என்கிறார். இந்த முழக்கத்தை முன் வைத்து சற்று சிந்தித்து பாருங்கள். நீங்கள் உங்கள் பிள்ளைகளை நல்லதொரு பிள்ளைகளாக வளர்க்கிறீர்களா? அல்லது நடமாடும் பிணங்களாக வளர்க்கிறீர்களா?? என்று....

ஒரு பையன் தன் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டான்..அவன் தந்தை அவனிடம் கேட்கிறார். ✸மேல் படிப்பு என்ன படிக்க போகிறாய்...? சமசுகிருதம் படி அங்கே (விண்ணுலகம்) நன்றாக இருக்கலாம் அல்லது ஆங்கிலம் படி இங்கே (மண்ணுலகம்) நன்றாக இருக்கலாம் என்கிறார்... சற்றும் தயங்காமல் ''நான் தமிழ் படிக்க போகிறேன் அப்போது தான் அங்கும் இங்கும் நன்றாக இருக்க முடியும்'' என்று கூறி தமிழ் படித்த சிறுவன் தான் பிற்காலத்தில் தமிழிற்காக பல சேவைப் புரிந்து நம் அனைவராலும் தமிழ் தாத்தா என்று அன்போடு அழைக்கப்படும் உ.வே.சாமிநாதபிள்ளை...

ஆம் தமிழ் தான் நம்மை எங்கும் காக்கும்..அண்ணல் காந்தியடிகள் கூட ''ஒவ்வொரு மனிதனுக்கும் தாய்ப்பால் போன்றது தாய்மொழி கல்வி'' என்கிறார். ஆங்கிலம் என்பது ஒரு மொழி அது ஒருபோதும் முன்னேற்றத்திற்கான வழி கிடையாது என்பதை உணரவேண்டும்... பிறமொழி கல்வி நம் பணத்தை அழிப்பதோடு சேர்த்து நம் இனத்தையும் அழிக்கிறது என்பதை உணர்ந்து அனைவரும் தாய்மொழி கல்வி வசம் திரும்பவேண்டும்...

ஒரு நாட்டின் எதிர்காலம் அந்நாட்டின் அடுத்த தலைமுறைப் பிள்ளைகள் கையில் தான் இருக்கிறது. நம் தமிழர் நாட்டின் எதிர்காலம் நம் அடுத்த தலைமுறைப் பிள்ளைகள் கல்வியில் தான் இருக்கிறது. இன்று தனியார் பள்ளியின் வாயிலில் தன் பிள்ளையின் அனுமதிக்கு காத்திருக்கும் அதே கூட்டம் நாளை அரசு பள்ளிகளை நோக்கி அணிவகுக்கவேண்டும்....

அனைத்து மொழிகளின் பிறப்பிடம்,
அதற்கில்லை நிரந்தர இருப்பிடம்...!

பணம் இருக்குமிடமே பிறமொழிகளின் புகழிடம் - அரசு பள்ளிகள் மட்டுமே நம் தாய்மொழியின் வாழ்விடம்...!

பிறமொழி கல்வியில் பணம் செலவாகும்,
தாய்மொழி கல்வியில் குணம் சிறப்பாகும்...!

யாதுமாகிய தமிழன்னையே,
எம்மை அழித்தாவது உம்மை வாழ வைப்போம்...!

- மணிபாரதி தங்க சுந்தர்

# நாய்ராஜா (சிறுகதை)


எப்படி சொல்வது அதை, எனக்கு தெரியவில்லை. நான் பார்த்ததும் கேட்டதும் கொஞ்சம் வித்தியாசமானவை. புரிய வைப்பது கடினந்தான். எல்லாமே நம் கண்களுக்கு பின்னால் நடப்பது போல, புரிந்து கொள்வது அவரவர் பாடு...

அந்த நள்ளிரவு நேரத்தில் நான் தனியாக நெடிய தார்சாலையில் நடந்துக் கொண்டே அன்றைய நிகழ்வுகளை மனதில் ஓட்டிக் கொண்டிருந்தேன். அன்று நான் வெளியூர் வரை வேலைக்கு சென்றிருந்தேன். பணி முடிய நள்ளிரவாகி விட்டது. இந்த வேளையில் ஊருக்கு பேருந்து இல்லை. என்னிடம் வண்டியுமில்லை. போகும் வழியில் அண்ணன் வீடு. தங்கிக்கொள்ள முன்பே கேட்டிருந்தேன். வேலைக்கு அழைத்து சென்றவர் வண்டியில் அண்ணன் வீடுவரை வந்து விட்டுவிட்டு சென்றார். அப்போது இரவில் அடையாளம் தெரியாமல் வேறொரு வீட்டின் கதவைத் தட்டிவிட்டு திட்டு வாங்கிக் கொண்டேன். தேடிப்பிடித்து சரியாக அண்ணன் வீட்டிற்கு சென்று கதவைத் தட்டினேன். மீண்டும் தட்டினேன். திறக்கவில்லை. சத்தமாக அழைத்தேன். தொலைப்பேசியில் அழைத்து பார்த்தேன். சென்ற அழைப்புகள் வீணாயின. மீண்டும் தட்டினேன். நேரம் கடந்துபோய் கொண்டிருந்தது. அங்கே அண்டை வீட்டார் சண்டைக்கு வருவார்களோ என்ற பயம் வேறு. பேசாமல் வீட்டிற்கு சென்று விடலாமா என்று தோன்றியது. அதுவே நடக்கும் என்று எண்ணவில்லை. ஆனால் ஐந்து கிலோமீட்டர் பயணப்பட வேண்டும், நடந்தே...

தட்டி தட்டி பார்த்து நிமிடங்கள் கடந்தது தான் மிச்சம். இன்றிரவு நடைப்பயணம் உறுதி என்று நினைத்துக் கொண்டேன். உனக்கு கதவு திறக்கப்படாது என்ற ஒலிக்கப்படாத பதிலை ஏந்திக் கொண்டு கணக்கும் மனதோடு நகர்ந்தேன். சாலை ஓரத்தில் சில தெரு நாய்கள் குரைத்தன. தூரத்தில் ஒரு வண்டி போகும் சத்தம். நாய்கள் சத்தம் வந்த திசையில் ஓடின. நான் சாலையில் நடக்கத் தொடங்கினேன்.

அந்த வனாந்திர சாலையில் நான் மட்டும் நடந்து சென்று

திருநிறைச்செல்வன்
கைவண்ணத்தில்....



கொண்டிருந்தேன். மனதின் ஓரத்தில் ஒளிர்ந்து மறையும் ஒரு கேள்வி. இந்த நிலைக்கு நான் எப்படி வந்தேன்..? என்ற கேள்வி என்னை விடைத் தேட வைத்தது. உழைப்பவனின் மதிப்பு உழைக்கும் வரை தான். உழைத்த பின் சாறு பிழியப்பட்ட சக்கைதான். அதன் பலனாய் இனி எப்போதும் நள்ளிரவுவரை வேலை செய்வது கூடாது என்ற முடிவை எனக்குள் உறுதிப்படுத்திக் கொண்டேன். அன்று முழுக்க உழைத்த களைப்பு மேலிடும் நேரத்தில் ஓய்வுக்கு வழியின்றி நட்டாஞ்சாலையில் புறக்கணிக்கப் பட்டிருக்கிறேன். கோபம் ஒருபக்கம், வனாந்திர தனிமை மறுபக்கம்...

அப்போது தூரத்தில்  சாலையில் யாரோ இருசக்கர வாகனத்திலிருந்து இறங்கினார். தெருநாய்கள் அவரை சுற்றிக் கொண்டன. வளைத்து பிடித்துக் கொண்டது போல முதலில் தோன்றியது. பிறகுதான் தெரிந்தது அவற்றைக் கூட்டியதே அவர் தான் என்று. பனியான இரவு. ஊசி குத்துவதுபோல் குளிர். இந்த நேரத்தில் யார் இவர், நாய்களைக் கூட்டிக்கொண்டு நிற்கிறார் என்று வினா எழுந்தது. அந்த மனிதர் இருக்கும் திசைப்பக்கம் தான் நான் போய்க் கொண்டிருந்தேன். அந்த வாகனத்தில் ஒரு தகரப்பெட்டி இருந்தது. தலையில் முக்காடிட்டு குளிருக்கு ஜிப்பு பிய்ந்த ஒரு மேல் கோட்டும் வேட்டியும் அணிந்திருந்தார். தகரப்பெட்டியிலிருந்து வறிக்கி முறுக்கு பிஸ்கட்டு ஆகியவற்றை நாய்களுக்கு போட்டுக் கொண்டிருந்தார். நாய்கள் ஒன்னுக்கொன்று சன்டையிட்டுக் கொண்டு உண்டுக் கொண்டிருந்தன. அந்த பரப்பில் அவைகளுக்குள் சண்டையும் குரைச்சரவும்தான். அப்போது யாராக இருந்தாலும் நாய்களின் வெறியான குரைப்புக்கு பயந்து தான் இருப்பார்கள். ஆனால் அந்த மனிதர் மட்டும் அசராமல் நின்று கொண்டிருக்கிறார். இதையெல்லாம் பார்த்த நான் யார் இவர் இந்நேரத்தில் இப்படியொரு காரியம் செய்கிறார் என்று நினைத்துக் கொண்டு அவரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன். நான் மனதில் ஓட்டியதை மறந்திருந்தேன். வயதானவர் அறுபதைத் தொட்டிருக்கும். முகத்தில் வெள்ளத்தாடியை தெருவிளக்கின் வெளிச்சத்தில் தெரிந்து கொள்ள முடிந்தது. அவரைக் கடந்து செல்கையில் என்னைப் பார்த்து சிறிதாய் சிரித்தார்.  நானும் லேசாய் சிரித்துவிட்டு சென்றேன்.

அது நீண்டசாலை. ஒருபக்கம் குறுக்குசாலைகள், அதையொட்டி கடைகளும் வீடுகளும். மறுபக்கம் அரசின் முக்கிய விருந்தாளிகளுடைய மாளிகையின் வெள்ளைநிற சுண்ணாம்பு பூசிய உயரமான மதில்சுவர்.  நான் அவரைக் கடந்திருந்தாலும் மனதிற்குள் இந்நேரத்தில் இப்படி செய்கிறாரே என்று மட்டும் கேள்வி எழுந்தது. அக்காட்சி மனக்கண்ணில் தோன்றிக் கொண்டே இருந்தது. வேண்டாவிருப்பாக தலையை உதறி அக்கேள்வியை தூக்கிப் போட்டுவிட்டு நடையைத் தொடர்ந்தேன். அப்போது அந்த மனிதர் வாகனத்தைக் கிளப்பி வேகமாக என்னைக் கடந்துச் சென்றார். அந்த நாய்களெல்லாம் தேருக்கு பின்னால் பூட்டியக் குதிரைகளைப்போல் அவரது வாகனத்திற்கு பின்னால் ஓடின. பார்வைக்கின்றி சென்று மறைந்தது அந்த காட்சி.

நீண்டசாலையில் இன்னும் நான் நடந்து கொண்டிருந்தேன். எனக்கு இடதுபக்கம்

நிறைய கடைகளும் வீடுகளும் தத்தம் வாயிற்கதவுகளால் கைதாகி கிடந்தன. சாலையில் அவ்வபோது சர்ரென செல்லும் வண்டிகள். நிமிடங்கள் சில கடந்து விட்டிருந்தன.

அதை நான் எதிர்பார்க்கவில்லை. அதே ஆள் சாலையில் இன்னொரு இடத்தில் தெருநாய்களுக்கு தீனி போட்டுக் கொண்டிருந்தார். இப்போது நான் மீண்டும் அவரை நோக்கி நடக்கிறேன். அவரருகில் நாய்கள் எல்லாம் சண்டைக்காடு. ஏற்கனவே கண்டதுபோல் காட்சியை மீண்டும் காண நேரிட்டது. அவ்விடத்தில் நிறைய நாய்கள் இருந்தன. என் நடையின் இருப்பு அவருக்கருகில் சென்றபோது திடீரென ஒரு நாய் குரைத்தபடி என்னிடம் வர, மற்றதெல்லாம் என் பல்லைப் பாருடா என்று கோரம் காட்டின. நள்ளிரவு நேரத்தில் நாய்களின் படை நம்முன் காதுகிழிய குரைத்தால் நிச்சயம் வியர்த்து ஒழுகும். எனக்கு நெற்றி நனைந்துவிட்டது. நல்லவேளை, அந்த மனிதர்தான் அவைகளை அதட்டி தூரப்போக வைத்தார். இல்லையேல் என்கதி ஊராருக்கு ஒரு சங்கதி.

’ரொம்ப தேங்க்சுங்க’, என்று கூறிவிட்டு அவ்விடத்தைக் கடந்து போனேன். பயம் சற்று குறைந்தாலும் உதறல் குறையவில்லை. தூரமாய் விலக விலகதான் குறைந்தது. அப்பாடா.. என்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு நடையைத் தொடர்ந்தேன். கொஞ்ச நேரம் தான். மீண்டும் அவரது வண்டி என்னைக் கடந்து சென்று மறைந்தது. எனக்கு கோபமே வந்துவிட்டது. இதே சாலையில் அவர் மீண்டும் நாய்களோடு நிற்பார். கடந்து போவதற்குள் வயிற்றில் குத்து வாங்கியது போலத்தான்.

நினைத்தபடியே நடந்தது. அவர் சாலையில் நிறைய நாய்களுக்கு மத்தியில் நின்றிருந்தார். என்ன செய்வது..? யோசனையானாலும் நடை நிற்கவில்லை. இப்போதும் நான் அவரை நோக்கிதான் சென்று கொண்டிருத்தேன். இனிமே நடுராத்திரி வரை வேலை செய்வியா… என்று உள்ளுக்குள் கடிந்துக் கொண்டேன். அவரிருக்கும் இடத்திற்கு நான் சென்றுக் கொண்டிருந்தேன். நான் அருகில் வரவர சில நாய்கள் குரைத்தன.



A. அருள்குமார்
IX - C
தேசிய மேல்நிலைப் பள்ளி
மன்னார்குடி

எனக்கோ பயம் மீண்டும் பற்றிக்கொண்டது.

' டேய் குதரவாலு, கம்முனு இரு, ச்சொ, ச்சொ, வா இங்க இந்தா, இத சாப்புடு,' என்றார் அந்த முதியவர். ஆத்தாடி, தப்பிச்சோம்டா என்று பெருமூச்சு விட்டுக்கொண்டேன்.
'தம்பி,' அவர்தான் அழைத்தார்.
'என்னையா ?'
'ஆமாம்பா, இப்படி வா கொஞ்சம், ' அருகில் அழைத்தார். தயங்கினாலும் சென்றேன்.
'சொல்லுங்க.'
'நாயின்னா ரொம்ப பயமா ? அவ்ளோ பயப்படுற ஆளு இந்நேரத்தில் ஏம்பா வாக்கிங் போற ?'
'வேலைக்கு கூப்டாங்க, போனேன். முடிச்சிட்டு வர இவ்ளோ நேரம் ஆச்சு. இங்க பக்கத்துல அண்ணன் வீட்டுக்கு போயிடலாம்னு போனேன். ரொம்ப நேரம் கதவத் தட்டுனேன், திறக்கல. என்ன பண்றது.? சரி, வீட்டுக்கு நடந்தே போயிடலாம்னு கெளம்பிட்டேன். இங்க நாயிங்க இவ்ளோ இருக்கும்னு தெரியாது.'
' மனுசன நம்புறதுக்கு நாய நம்பிட்டு போலாம்.' சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டார்.
' இந்த நேரத்துல ஏங்க நாயிங்களுக்கு தீனி போடுறீங்க ? இது தூங்குற நேரமில்ல ?'
' ஆமா, தூங்குற நேரம்தான். அப்ப நீ ஏன் இப்படி நிக்கிற ?'
' சரிதான்.'
' அப்படியில்ல தம்பி, கேளு. நாயிங்க பகல்ல தூங்கும். ராத்திரியில திரியும். ஆனா எப்பவும் முழுசா தூங்காது. ராத்திரியானா இது அதுங்களோட உலகம். அதுங்க அனுமதிச்சாதான் நீ வீதியில போகமுடியும். அதுங்களுக்கு அன்பும் இருக்கு வம்பும் இருக்கு. ஆனா வேசம் போட தெரியாது. எஜமானுக்கு வாலாட்டும். மத்தவங்களுக்கு பல்லக் காட்டும்.
' ம்...'
' இந்த நேரத்துல நான் ஏன் தீனி போடுறேன்னு தானே கேட்ட. அதுக்கு காரணம் நாயிங்களாம் இப்பதான் ஒன்னா இருக்கும். இப்பதான் முழிச்சிருக்கும். அதான்.'
' அது சரி. இந்த இடத்தோட சேர்த்து மூனாவது முறையா பாக்குறேன். ஊருல இருக்கும் நாயிங்களுக்கெல்லாம் நீங்க ஏன் தீனி தரீங்க? யார் நீங்க.?'
சண்டைப் போட்டுக் கொண்டிருந்த சில நாய்களை அடக்கிவிட்டு மீண்டும் தொடர்ந்தார். பாருங்கள், நாய்கள் பற்றிய பயமின்றி இப்போது அவருடன் உரையாடிக் கொண்டிருக்கிறேன்.
' நியாயந்தான். நடுராத்திரியில இப்படி பாத்தா நிச்சயம் கேள்வி வரும். நாயிங்க நன்றியுள்ள ஜீவங்கப்பா. தீனி தரதுக்கு காரணம் இருக்கு. ஹி..ஹி...'
' என்ன காரணம் ?' கேள்வி வேட்கையில் நடுநிசியை மறந்துப் போனேன்.
' நான் ஒண்டிக்கட்ட. நாய்க்குட்டி ஒன்னு வளத்தேன். பத்து வருசமா இருந்துச்சி. நான் முறுக்கு செஞ்சி விக்கிறவன். என் நாய் எனக்கு செஞ்ச ஒரு ஆதாயம், தெரு நாய்ங்கள பத்தி தெரிஞ்சிக்க உதவுனதுதான்.'
' அப்படியா..!'
' ஆமா. நான் நாயிக்கு முறுக்கு, சோறு, பிஸ்கட்டுனு போட்டேன். அது சில தெரு

நாய்ங்ககூட மேஞ்சிட்டு வந்து சாப்டும். போட மாட்டன்னு இருக்க முடியுமா... அப்பப்ப அதுங்களுக்கும் போட்டேன். அதுங்க ராத்திரில ஒன்னா வரும்போது போட்டு போட்டு பழக்கமாயிடுச்சி. இப்ப எல்லா தெரு நாய்ங்களும் எனக்கு தெரியும்.'

' ம்...'

' என்னோட நாய் திடீர்னு ஒருநாள் செத்துப்போச்சி. என்னால அத தாங்கவே முடியல. இதா பாரு, என் நாய் குட்டியா இருந்தப்ப அதுகூட நான் எடுத்துகிட்ட போட்டா இது.' சொன்னவர் தன் சிறிய பர்சிலிருந்த படத்தைக் காட்டினார். ' என் நாய் போன பின்னால் இந்த தெரு நாய்களுக்கு அப்பப்ப கெடைக்கிற பண்டத்தக் கொண்டாந்து போடுவேன். ரொம்ப நாளா போட்டுகிட்டிருக்கேன். நாயிங்கள அதிகமா பாத்து அதப்பத்தி தெரிஞ்சிக்கிட்டேன். இப்போ எனக்கு ஒன்னுன்னா அதுங்க ஓடிவரும் தெரியுமா..!'

' ஓடி வருமா ? எதுக்கு ?'

' அதான் சொன்னனே, நாயிங்கலாம் நன்றியுள்ள ஜீவங்கனு. எனக்கு ஒரு பிரச்சன வந்தப்ப எனக்காக உதவிசெய்ய நாயிங்கதான் வந்தது, தெரியுமா !'

' தெரியாது.'

' கேளு. ஒருநாள்  ஒரு மொரட்டு பய, என்ன வேணும்னு வம்புக்கு இழுத்தான். முறுக்கு போட்டுட்டு வண்டிய எடுக்கும்போது தெரியாம அவன் வண்டியில இடிச்சிட்டேன். கடைவீதினு பாக்கல, வயசில பெரியவன்னு கூட பாக்கல. என்ன போட்டு அடிச்சான். சுத்தி நின்னுகிட்டு வேடிக்கைப் பாத்தாங்களே  ஒழிய ஏன்னு ஒரு வார்த்த யாரும் கேக்குல. அந்த நேரத்துல என்னால என்ன பண்ணமுடியும் ? மனுசங்க அவ்வளவு சுருங்கி போயிட்டாங்க. அப்பதான் என் பக்கத்தில் ரெண்டு நாயிங்க நின்னுகிட்டு அவனப்பாத்து கொளச்சதுங்க. அதுங்க சத்தத்தக் கேட்டு அந்த ஏரியா நாயிங்களாம் ஓடி வந்துருச்சிங்க. ஆறேழு நாயிங்க ஒன்னா சேந்துகிட்டு அவனப்பாத்து கொளச்சதுல அவன் பயந்துட்டான். இருந்தா சுத்துப்போட்டு கடிச்சிப்புடும்னு பக்கத்து கடைக்குள்ள அப்படியே பூந்துகிட்டான். நான் மெல்ல எழுந்து என் வண்டியை எடுத்திட்டு பாத்தேன். நாயிங்க இன்னும் கொளக்கிதுங்க அவன் கடையவிட்டு வெளிய வரல. சுத்தி நின்ன சனங்க முன்னாடி நாயிங்கதான் எனக்கு உதவிச்சிங்க. அதான் சொன்னேன், மனுசனவிட நாயிங்கல நம்பலாம்னு !'

' .....'

' நம்ப முடியலதானே ?'

' ஆமா.'

' நாயிங்களப் பத்தி தெரிஞ்சா நம்புவ. சரி, கேட்டுக்கோ. தெருநாய் எதாவது கடிக்கிற மாதிரி வந்தா கூசு கூசினு சத்தம் பண்ணி பாரு,  அமைதியாயிரும். நெனப்புல வச்சிக்கோ.'

' நிஜமாவா ?'

' ஆமாம்பா, கெளம்பு. இனிமே எவனும் உன்ன கொளக்க மாட்டான்.' நான் கிளம்பினேன். சட்டென நின்று அவரிடம் ஒன்று மட்டும் கேட்டுக் கொண்டேன்.

' ஐயா.'


' என்னப்பா ?' வண்டியை எடுத்துக் கொண்டிருந்தவர் கேட்டார்.

' உங்க பேரு என்னங்கய்யா ?'

’ க்ஹ்ஹஹ்ம்... என் உண்மையான பேருக்கு வேல இல்ல. வேணா நாய்ராஜானு வச்சிக்கோ.’

’ ம்... நாய்ராஜா.’

- கார்த்தி டாவின்சி




இ. யாழினி
கைவண்ணத்தில்



R. கோகுல்
XII - E (A/A)
தேசிய மேல்நிலைப் பள்ளி
மன்னார்குடி

# தொழில்நுட்ப தொல்லைகள்



செந்தில்குமரன்
மன்னார்குடி

ஏன்டா எப்ப பார்த்தாலும் போனும் கையுமா தான் இருப்பியா? வேற வேலையில்லயா உனக்குனு பக்கத்து வீட்டு பாட்டி, பரதனை பார்த்து கேட்டுச்சு.

பரதனோ, இல்ல பாட்டி, புதுசா போன் வாங்கலாம்னு இருக்கேன். அதான் எந்த மாடல் சரியா இருக்கும்னு அலசி ஆராய்ஞ்சிட்டு இருக்கேன்.

20MP Rear camera, 12MP front camera, 4 GB RAM இத விட என்ன வேணும்? இது இருந்தா நம்ம பார்க்குற பட்ஜெட்ல வாங்கிடலாம்னு சொன்னதும், நா ஒன்னு சொல்லட்டானு பாட்டி கேட்டுச்சு. நீ என்னத்த பெருசா சொல்ல போற, சொல்லி வை. உன் ஆசைய ஏன் கெடுப்பானே!

போன் வாங்குறப்ப RAM மட்டும் பார்த்தா போதாது, processor என்னனு பார்க்கனும். Single core processor, dual core, quad core, octa core போய் இப்ப hexa core வரைக்கும் processor கிடைக்குது.

இந்த core அப்படினா என்ன பாட்டி?

சுருக்கமா சொல்லனும்னா நம்ம வீட்டு வயலுக்கு போற பாதைனு சொல்லலாம்.
ஒத்தையடிப் பாதை - Single Core
இரட்டையடிப் பாதை - Dual Core.
இந்த ஒத்தையடிப் பாதைல ஒருத்தர் போய்ட்டு அவர் வேலைய முடிச்சிட்டு வந்தா தான் அடுத்தவர் அந்த வழில போக முடியும்.

இதே நாலு வழி, எட்டு வழினு இருந்தா டக்குனு போலாம் பாரு. உடனே நம்ம ஊருல போடுறேனு சொல்லிட்டு நம்ம உயிரை வாங்குற பசுமை வழிச்சாலை நல்லதுனு நினைக்க கூடாது. புரியுதாடா பரதா?

ஓ.. அப்ப octa core processor ல எட்டு வழி, அதனால camera, music, game, call, facebook, whatsappனு மாத்தி மாத்தி நம்ம தண்னு பண்ணாலும் hang ஆகாமல் அது அது அவங்க வேலைய பார்த்துட்டு போகும்னு சொல்ல வர, சரி தானே!

சரி தான் கண்ணு இந்த processor-களை விற்கிற இரண்டு நிறுவனங்கள் தான் Snapdragon மற்றும் Mediatek. நம்ம கணினில இருக்கு Intel மற்றும் AMD போல தான் கைப்பேசியில் இந்த processors.

Snapdragon processor இருக்க கைப்பேசி, செயலில் துரிதமா இருக்கும். இதண்ணுணிட் RAM பொருத்தனும்னா Snapdragon processor இருக்கிற கைப்பேசில மட்டுமே முடியும். ஆனா Snapdragon processor இருக்க கைப்பேசி விலை கூட இருக்கும், ஆனால் தரமானதா இருக்கும்.

இதுவே Mediatek எடுத்துக்கிட்டா, உங்கப்பன் சொல்வானே, cheap and best, அது தான் Mediatek.
இப்ப வர Mediatek, gaming apps-களுக்கு பொருத்தமா இருக்கு. P series and X series நம்பி வாங்கலாம்.

Processor சொல்லிட்ட சரி.. RAM பத்தி சொல்லவே இல்ல?

அதுல என்ன பெருசா இருக்க போகுது, RAM னா, உனக்கு புரியுற மாதிரி சொல்றேன் கேளு,
இப்ப நீ சாப்பிட போற, சாப்பிட தேவையான தட்டு, டம்ளர், சோத்துக்குண்டான், குழம்பு சட்டி எல்லாத்தையும் எடுத்து சாப்பிடுற இடத்துல வைக்க வேண்டியது, சாப்பிட்டு முடிச்சதும் எடுத்து உள்ள வச்சிட வேண்டியது. இதான்பா RAM. சாப்பிடுறப்ப உனக்கு எந்த இடையூறும் இல்லாம இருந்தா அது நல்ல RAM.

அப்புறம் இதுல இரண்டு வகை இருக்கு. ஒன்னு
LPDDR 3, ஒன்னோன்னு LPDDR 4.
(LOW POWER Double Data Rate)

இந்த DDR 4 ல clocking speed அதிகமா இருக்கும், எல்லாமே சொய்ங்குனு நடக்கும். DDR 3 ல கொஞ்சம் மெதுவா தான் நடக்கும்.

4GB LPDDR3 RAM ஐ காட்டிலும், 3GB LPDDR 4 RAM அதிக திறனோட இருக்கும். 4GB RAMனு கண்ண மூடிட்டு வாங்காத.

வாங்கிட்டு சொல்லு! நா வாரேன்.

**இரா. செந்தில் குமரன்**
மன்னார்குடி



M. தினேஷ்
12 - C
தேசிய மேல்நிலைப் பள்ளி
மன்னார்குடி

# முதியோர் சிறை...!!!!

மடியில் கனமோ?
அது கனம் இல்லையே
சுகம்...!!
என்று ஈன்றெடுத்த
தாய் அறியுமா உங்களுக்கு....???

தோளில் கனமோ...?
அது கனம் இல்லையே
கிரீடம்...!!
என்று தன்
தலைக்கு மேல்
தூக்கி திரிந்த
தந்தை தான் அறியுமோ
உங்களுக்கு....???

பத்து மாத கருவறை
சிறையில் அடைத்த
குற்றத்திற்காக நீங்கள்
கொடுக்கின்ற மிக
பெரிய தண்டனையோ
முதியோர் சிறை....!!!

தான் கறை கொண்டாலும்
தன் பிள்ளைகள்
கவலை கொள்ள
கூடாது என்று...
யாவருக்கும் முன்
தரம் குறையாமல்
உன்னை வளர்த்த
தாரக மந்திரம் அல்லவா தந்தை...!!

தன் குருதி உடைத்து
பிள்ளைகளின்
பசி போக்க
தன் தூக்கம்,அலுப்பு
அனைத்தையும் உதறி..
தான் அன்னம் உண்ணும் போதும்
தன் பிள்ளை கழிக்கும் மலத்தை
இன்முகத்தோடு
சுத்தம் செய்து...
சுத்தம் செய்த
அதே கையோடு அன்னத்தை பருகும்
அற்புத தேவதை அல்லவா தாய்....!!!

இவர்கள் செய்த தண்டனை
எல்லாம் உங்கள் தேகத்தை
வறண்டியதோ இல்லை
சுரண்டியதோ என்னவோ
தெரிய வில்லை தன் பிள்ளைகள்
கைகளாலேயே முதியோர் சிறையில்
அடைக்கப்பட்டு வருகிறார்கள்...!!!

ஒன்று மட்டும் நிச்சயம்
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
என்னும் வள்ளுவனின் வாக்கு
ஒன்றும் பொய்யாக போவதில்லை...
இன்று நீங்கள் செய்யும்
அதே காரியம் உங்களை
வந்தடையும் என்பதை மறந்து விட
வேண்டாம்...
காலம் சிறந்த மருந்து
மனிதர்களுக்கு...!!!

விடையும் கூட...!!!

தாய் தந்தை என்றும் போற்றுவோம்...!!
அவர்கள் இல்லையேல் நாம் இல்லை
என்று உணருவோம்....!!!

நன்றி

ஆரூர் கவிஞன் தீன்

# தமக்கை என்னும் முதல் தோழி

அனைத்து ஆண்களுக்கும்
முதல் பெண் சிநேகிதி
அவர்கள் சகோதரியே..

முறைப்பெண்ணிடம் பேச
வரைமுறை இருக்கையில்,
முறைப்படி பேச ஒரு பெண் ...

- செந்தில் பக்கிரிசாமி

# சகோதர அதிகாரம்

அப்பாவிடம் காட்டும் அடக்கம்
அண்ணனிடம் அடங்கும்!

தந்தையிடம் உள்ள தயக்கம்,
தம்பியிடம் தஞ்சம்!

செல்லமாக அதட்டும் அண்ணனும்
உரிமையுடன் தட்டி கேட்கும் தம்பியும்
இருந்தால் ஆம்!!

சகோதரர்களுடன் பிறந்தவர்கள்
ஆசிர்வதிக்கப்பட்டவர்கள்!!

- கிருத்திகா கிரிராஜ்

# படபடப்பு

விரைவாக வரும் தொடர்வண்டி
முன் விழுந்து ..
உயிர் பிழைத்தவன் போல் ஆகிறேன்
''பெட்ரோல் விலை
ஏறி இறங்கும் போது''......

- பாலாஜி கலைச்செல்வன்




P. ரக்ஷிதா
VIII - A
மார்டன் நடுநிலைப் பள்ளி
மன்னார்குடி

# மறத்து போன மனிதம்

உலகத்தின் புதுமையே
இதயங்களின் மாற்றமோ!

பெண் ஆடையில் கட்டுப்பாடு
கேட்கிறார்கள்
அவர்கள் மனதிற்க்கு பூட்டு போட
மறந்து!

சிசுவின் ஆடையில் எதை கண்டார்கள்
பேடிகள்!

ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று
கூறிவிட்டு
சாதி சான்றிதழ் கேட்கும் உலகமிது!

வேடிக்கை பார்க்கும் பழக்கம் தவறல்ல
ஆனால் உயிர் ஊசலாடும் நிலையிலும்
முதலுதவி செய்யாது காணொளி
எடுப்பது தவறில்லையா!

உறவுகளை மறந்து கைபேசியில்
ஆழ்ந்து உறவை இழந்து முகம் தெரியா
மாந்தரிடம் முறையற்று போகும் சூழல்
நிலையானதா!

அக்கம் பக்கம் யாரிடமும் பேசாமல்
வீட்டுச்சுவறோடு பேச ஆரம்பித்தால்
இங்கு இருதய நோயோடு பலர்!

ஆயிரம் காலத்து பயிராம் திருமணம்
மோகம் மறந்ததும் வழக்கு மன்றத்தில்
முறிந்தே போகுதாம் நாகரீக
போர்வையிலே!

கல்வியில் தாய்மொழி கல்வி
தேவையற்றது என்றனராம் அதன்
விளைவு இன்று ஆரம்ப கல்விக்கே
சொத்தை விக்கனுமாம்!

மறத்து போன மனிதர்களாய் வாழ்வதா
மனித நேயத்தோடு வாழ்வதா முடிவு
செய் மனமே!

இப்படிக்கு
**கண்ணம்மா (எ) EGR**
உள்ளிக்கோட்டை

## மன்னிப்பு

தன்மானம்,
சுயமரியாதை என்ற

இரு மனிதன்
மண்டியிட தயங்குவதாலேயே

மன்னிப்பு என்ற மனிதன்
நடக்க இயலாமல் போகிறான்

## வேண்டுதல்

என்றோ வேண்டிய வேண்டிதலை
நிறைவேற்ற
பள்ளி இல்லாத நாளில்
விரதம் எடுக்கின்றன
ஏழை குழந்தைகள்.

தர்ஷினி

# யாதுமானவள்

வாழ்க்கையை வாழ
கற்றுத் தந்தவளே...

என் வாழ்க்கையை
வசந்தமாக்கியவளே..
அன்பும் பன்பும்
பாசமும் தந்து
என்னைக்
பைத்தியகாரனாய்
மாற்றியவளே..

தனிமரமாய்
இருந்த
என்னை
தடுமாறச்
செய்தவளே

ஆணவமாய் திரிந்த
என்னை
ஆண்மகனாய் மாற்றியவளே

ஆயிரம் என்னை
அறிந்தும்
அரவணைப்புத் தந்தவளே

அன்னையாய் என்னை
பாதுகாத்தவளே....

ஆயிரம் பெண்கள்
இருந்தாலும்
அரவணைக்க நீ வேண்டும்
எனக்கு
ஆயுள் முழுவதும்
நீ மட்டும் வேண்டும்

தவறாக எண்ணி என்னை
தவறுசெய்ய வைத்துவிடாதே
தவறிவிடுவேன்
உன்னை விட்டு அல்ல
இவ்வுலகை விட்டு....

என்றும்
உன் வருகைக்காக....

S.S. கார்த்திக், DME
உள்ளிக்கோட்டை



கிறிஸ்ட் போஸ்

# விளைநிலமா? விலைநிலமா?

என் ஆறாண்டு பயணத்தில்
நிறைய மாற்றங்கள்...
தஞ்சாவூர் வழி
மன்னார்குடி சாலைகளில்...

அன்று
பச்சை பட்டாடை
கட்டிய பசுமையான
வயல்வெளிகள்...

இருபுறமும் இளைப்பாற
நிழல்களாய் மரங்கள்...
தூக்குவாளியோடு
தூரத்தில் பெண்கள்...
மண்வெட்டியோடு
மடை திறந்துவிட்ட ஆண்கள்...
சிறார்களின்
மிதிவண்டி பயணங்கள்...

சன்னலோரத்தில்
சில்லென்ற காற்றில்
என் பயணமென்னவோ
இனிக்கத்தான் செய்தது...

இன்று
வயல்வெளிகள்
வறட்டு நிலமாகி...
விலைநிலமாய்
மாறிய அவலம்...
மரங்கள் மரித்து விட்டன...
இல்லை இல்லை
கொன்றொழித்தார்கள்...

தூக்குவாளி
தூக்கிய காலம்
போய்விட்டது
மாறாய் குடமேந்தி
குடிநீருக்கு
காத்திருக்கும்
காலமாகிவிட்டது...

மண்வெட்டி பிடித்த கை,
மண்ணை வெட்டி
பிழைக்கும் கூலித்
தொழிலாளியாகிவிட்டான்...
மிதிவண்டியோட்டியவன்
மின்னல் வேகத்தில்
பறக்கிறான்
இரு சக்கர வாகனத்தில்...
விலை நிலத்தால்
வந்தவையாக இருக்கும்...

அன்று சிலீரென்ற
காற்றால் இனித்த
என் பயணம்...
இன்று
அனல் காற்றால்
கசக்கிறது...

விளைநிலம்
விலைநிலமாகி
கண்ணீர் வர
காரணமாகியது...

நம் நிகழ்கால வாழ்க்கை
புதிராக போனால்
நாம் என்ன செய்யக்கூடும்...

நம் வருங்காலமென்பது
கனவாகி போனால்
எங்கு நாம் செல்லக்கூடும்...

உழவு
சாகவில்லை
சாகடிக்கபட்டு
கொண்டிருக்கிறது

– இலக்கியா இளவரசன்

# வலி(மை)

அன்றொரு நாள்
விதைத்த விதைதனை
கருக்கி அழிக்காமல்
முளைத்து செழித்தோங்கும்
அழகோவியமாய் படைத்தாளே..

ஊன் வலி
ஏதுமறியா பதின்ம வயதில்..
சதைப் பசியாற்றி..
ஊனுள் ஊன்
வளர்க்கும் கலைப் பயின்றாளே..

தூரமாகும் நாட்களை எண்ணி
கண்கலங்கும்
கன்னிப் பருவமதில்..
கரு வளர்ச்சி
காரணம் அறியாமல்
குழம்பித் தான் போனாளே..

ஹார்மோனைப் பற்றி..
முழுதாய் படித்து
முடிக்கும் முன்னரே..
பற்பல வேதியியல்
நிகழ்வுகளின்
பரிசோதனைக் கூடமாய்
பரிதவித்தாளே..

சோம்பித் திரிய வழியின்றி..
ஓடியாடி வேலை செய்ய போகினும்..
தன்னிலை மறந்து..
தலைச்சுற்ற வைக்கும்..
மசக்கையின் பசிக்கும்
தீனியாய் தான் போனாளே..

சதைக்குள் சதையாய்
வளர்ந்து வரும்
சிசுவின் வளர்ச்சிக்கு..
தன் ஊனும் வளர
மருண்டுப் போய் விழித்தாளே..

கால்கள் வீங்கி
சுமக்க முடியா
பாரமதை தாங்கி..
சுமையிறக்கும் நாளிற்காய்
வேண்டினாளே..

கருப்பைக் குடிவிட்டு
தாய் மடியில் விழுந்துவிட..
கருப்பை வாய்வழி
வரத் துடிக்கும்
கருவின் முயற்சியை..
அதிர்ச்சியாய் தான்
எதிர்கொண்டாளே..

வலிக்கிதமாய்
பற்றத் துடிக்கும் கைகளால்
மெத்தை விரிப்பை இறுகப் பற்றி
கதறியழும் வேளையில்..
வித்திடப்பட்ட நாள்தனில்..
கதறியழுத சோகம்
நினைவில் வரக் கண்டு
உடைந்து தான் போனாளே..

தன்னுள்ளிருந்து வெளிவரும்
சிசுவின் பாரம்
தன்னெஞ்சையழுத்துகையில்..
அன்றொரு நாள்..
மிருகத்தினிதழொற்றலில்..
கரைந்துப் போனதையெண்ணி..
இடந்துத் தான் போனாளே..

அரும்பாடுப்பட்டு
கருப்பை உலகு விட்டு..
புது உலகடைந்த மழலை
வயிற்றுப் பசிக்காய்
கதறியழுது
நெஞ்சுக்காம்புத் தேடி வருகையில்.

உடற்பசியாற்றி அவன்
உடனுறங்கிய கணம்

வந்துப் போனதில்..
கவலை மறந்துப் போனதாய்
சோம்பினாளே அவள்..

பெருந்திணையது
நடைமுறையாய் நடந்தேறியதை எண்ணி..
இகழ்ச்சி முறுவலை உதிர்த்தாள்..
குழந்தைத் திருமணத்தில்..
தம்மகவு ஈந்த..
பதின்பருவக் குழந்தை ஒருத்தி!!

- கனிமொழி

# அரசியல்

இது ஒரு
முரட்டுபோர்க்களம்
முரண்பாடுகளின் கூடாரம் இங்கு
மட்டும்தான்
எதிரிகளை விட
வேடிக்கை பார்ப்பவர்களையே
வேரறுக்கும்
வித்தியாசமான
போர்க்களம்

புயல் கூட
புழுதியனுப்பி
எச்சரிக்கையூட்டும்
இந்த அரசியல்
சூறாவளியோ
உயிரைப்பருகிவிட்டு
உடலுக்கு விருந்தளிக்கும்

சஞ்சீவி வேர்
ஆற்று நீரை எதிர்கொள்ளும்
அரசியலின் வேர்
ஆற்றையே
விழுங்கிக் கொள்ளும்

தேனி கூட
தீண்டும்வரை தீண்டுவதில்லை
இந்த அரசியல்வண்டோ
மரகந்தத்தினுள்ளே
அதிகாரத்தை செலுத்தி
அஸ்திவாரத்தையே
ஆட்டிப்போடும்

பூவை பறிக்க
கோடாரியை எடுக்கும்
பொல்லாத ஆயுதம்

தளைகளையும் பல
தலைகளையும் மென்றுதின்னு மெதுவா
ஏப்பமிட்டபடி
கசாப்புகடையை
வம்பிழுக்கும்
கறுப்பாடுகளாய்
இந்த அரசியல்
வளர்த்த கிடா
மார்பில் மட்டுமல்ல
வயித்துலேயும்
சடுகுடு ஆடிவிட்டுபோகும்

ஒரு பக்கம் தண்ணீர்
மறுபக்கம் கண்ணீர் இது
அரசியலின் முடிச்சு
அவிழ்க்க முற்பட்டால்
அரசியலின்
ஆழத்தில்
புதைக்க நேரிடும்

யானையை பூட்டி
போரடித்த நாட்டில்
ஆணையை மூட்டி
அழிவை விதைக்கும்

அற்ப ஆயுதம்

இந்த
அட்டைப் பூச்சி மட்டும்
சற்று
விதிவிலக்காக
ஓரிடத்தில்
படுத்துக்கொண்டேஊரின்
இரத்தங்களை
உறிஞ்சு விடும்

இந்த
தோட்டத்தில் மட்டுந்தான்
ரோசாவையே
நட்டாலும்
முளைப்பதென்னவோ
முட்புதர்கள் மட்டுமே

ஐந்தாண்டுக்கு ஒருமுறை
அலங்கரிக்கும்
சக்கரமில்லாத் தேர்

இதுவும் ஒரு
விவசாயம் தான்
ஐந்நூறு ஆயிரம்
அள்ளிவிதைத்தால்
கோடிகளை மட்டுமே
கொட்டித்தீர்க்கும்
பணம் மரம்

இந்த
காட்டில் மட்டுமே
சிங்கங்களை விடுத்து
நரிகளே நாடாளும்

இந்த
குளத்தில் மட்டும்
மீனுக்கு காவலாக
கழுகுகள் காத்திருக்கும்

அரசியல்
கத்தியின்றி
இரத்தமின்றி
காவு வாங்கும்
யுத்தக் களம்

– மேலவாசல் செங்குட்டுவன்

# உலக நீதி

இளவயதிலே துள்ளி விளையாடி
பிஞ்சு நெஞ்சம் வலித்த
தெய்வ நெஞ்சம் பதறி
நோய் கொண்ட பகிர்ந்து
சகிப்பிலே தன்னை அளித்த
வாழையவள்,

இன்று கூனி குறுகி நிற்கொல்லா
கண்கள் மருக நின்று
காக்கும் காதல் இன்றி
பிரிந்த உடனே செத்து
வாழ்ந்து சாகும் தெய்வம்
நாளை விட்ட நீயும்
எனக்கான இடத்தில் சாபம் நானில்லை
உலக நீதியாம்
நீ வாழ நான் தனியே வருந்தா மகனே!!!

- தமிழ் சரவணன்

# உலகின் மிக புனிதமானவைகளில்

முக்கியத்துவமுடையதும்
முதன்மையானதும் தாய்மையே...

தாய்மை என்பது பத்து மாதங்கள்
மட்டும் தான் என்றால்
அது உணராதவர்கள் கூற்று...

ஆண்மகனாக நான் கண்டு
உணர்ந்தேன்
தன் உயிரை துச்சமென எண்ணி
தன் மற்றொரு உயிரை பெற்றெடுக்கும்
சம்பவம்
உலகின் எந்த உயிரினமும் உணராத
ஒரு வலி..
வலி என்றாலும் வார்த்தைகளால்
கூறிவிடலாம்

அது வார்த்தைகளால் விவரிக்க
முடியாத உணர்ச்சி...

தான் பெற்றெடுத்த உயிரை ஒரு
புறமும்
தன் உடமைகளை ஒரு புறமும் சுமந்து
செல்லும் தாய்மையை காணும்
ஒவ்வொரு ஆண்மகனின் கண்களும்
சற்று கலங்கும்....

மழையானாலும் வெயிலானாலும் தன்
குழந்தையை
இடையை விட்டு இறக்காமல் அவள்
செல்லும் பயணம்..

தன் குழந்தை நடைபோடும் என்று
தெரிந்தும்
எங்கோ அதன் பாதம் வலித்து விடுமே
என்று
தன் இடையில் ஏந்தி செல்லும்
தாய்மை எவர்க்கு வரும்....

உயிரை சுமப்பவள் மட்டுமல்ல தாய்
அந்த உயிரை மனதாலும் உடலாலும்
பக்குவப்படுத்தி
அரவணைத்து அடைகாத்து
வாழ்பவளே தாய்...

ஒருசில தவறான கண்கள் தாய்மையை
உணர்ந்தாலே போதும்..
அங்கே தவறுகள்
நிகழப்போவதில்லை...

பெண்மையை தாய்மை அடைய
செய்வது மட்டுமல்ல ஆண்மை..
அப்பெண்மையை மதித்து
போற்றுவதும் பாதுகாப்பதிலுமே
உள்ளது உண்மையான ஆண்மை.....



எழுத்துரு எண்ணம்
**பா.மாதவன்,**
இராசமன்னார்குடி

# சட்டம் 377



நிரஞ்சன்
மன்னார்குடி

இந்திய தண்டனைச் சட்டம்- 377 ஆங்கிலேயர்கள் இந்தியாவை காலனியாக வைத்திருந்தபோது ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்ட சட்டம். ஓரினச்சேர்கையில் ஈடுபடுபவர்களை, தன்பால் ஈர்ப்பு கொண்டவர்களை தண்டிக்கும் தண்டனைச் சட்டமே இந்த 377 சட்டம்.

சமீபத்தில் இந்திய உச்ச நீதிமன்றம் இச்சட்டத்தை நீக்கியுள்ளது. ஓரினச்சேர்கையை  சட்டபூர்வமாக்கியுள்ளது. இதன் மூலம் தன்பால் ஈர்ப்பு (பெண் பெண்ணோடும் (Lesbian), ஆண் ஆணோடும் (Gay), இருபால் ஈர்ப்பு (Bisexual), பெண்ணாக தன்னை பாவிக்கும் ஆண், ஆணாக தன்னை பாவிக்கும் பெண் (Transgender) ஆகியோருக்கு உரிமையும் அங்கீகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆணும் பெண்ணும் இணைவதே இயற்கையானது, ஓரினச்சேர்க்கை என்பது இயற்கைக்கு முரணானது என்ற வாதம் பரவலாக இருக்கிறது. தன்பால் ஈர்ப்பு என்பது இயற்கைக்கு முரணானது அல்ல. மனிதர்கள் தோன்றிய காலம் முதலே தன்பால் ஈர்ப்பு என்பது இருக்கிறது, இருபால் ஈர்ப்பும் இருக்கிறது. மனிதர்கள் மட்டும் அல்ல அணைத்து உயிர்களும் ஓரினச்சேர்கையில் ஈடுபடுகிறது. ஓரினச்சேர்க்கை (Homosexuals) என்பது இயற்கையானது தான். எதிர்பால் ஈர்ப்பு போல தன்பால் ஈர்ப்பும் இயல்பானதே.ஈர்ப்பு என்பதே இயற்கை தானே. பாலுணர்வில் எதிர்பாலின பாலுணர்வு போலவே தன்பாலின பாலுணர்வும் மரபணு அடிபடையில் இயற்கையாகவே உள்ளது. இயற்கையிலேயே அவர்களுக்கு அந்த உந்துதல் இருக்கும். நவீன அறிவியலும் சரி, நம் முன்னோர்களின்  அறிவியலும் சரி இதை தான் சொல்கிறது.  இந்த புரிதல் புதிதல்ல, நம் முன்னோர்களிடம் இந்த புரிதல் இருந்தது தான், சில நூற்றாண்டுகளாக தான் நாம் இந்த புரிதலின்றி இருக்கிறோம். வெள்ளைக்காரனுக்கு இருக்கும் புரிதல் நமக்கு இல்லை என்றும், வெள்ளைக்காரன் முற்போக்கு சிந்தனை உள்ளவன், நாம் காட்டுமிராண்டி என்று பலர் பேசிவருகிறார்கள். 377 தண்டனை சட்டத்தை இந்தியாவில் கொண்டுவந்ததே வெள்ளைக்காரன் தான்.

மேலும் உடலுறவு என்பது இனப்பெருக்கத்துக்கு மட்டும் தான் என்றும், இனபெருக்கத்துகாக தான் உடலுறவு என்றும் ஒரு கருத்து உள்ளது. இனப்பெருக்கம் என்பது இயற்கையின் தேவை, இந்த பிரபஞ்சத்தின் தேவை. பாலின்பம் என்பது உயிர்களின் தேவை, உடலின் தேவை. இனப்பெருக்கம் வேறு, பாலின்பம் வேறு. ஒரு ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்ளும்போது பெண் பாலின்ப உச்சகட்டத்தை அடைந்தாலும் சரி அடையாவிட்டாலும் சரி, ஆண் பாலின்ப உச்சகட்டத்தை அடைந்து ஆணின் விந்து பெண்ணின் கருப்பையில் சென்றுவிட்டால் குழந்தை உருவாகிவிடும்.

ஆகவே பெண் பாலின்ப உச்சகட்டம் அடையாமலேயே குழந்தை உண்டாகிவிடும். ஆண் விந்துவை வெளியேற்றாமலேயே பாலின்ப உச்சகட்டத்தை அடைய முடியும்... இதிலிருந்து என்ன தெரிகிறது? பாலின்பம் வேறு. இனப்பெருக்கம் வேறு. இனபெருக்கத்துகாக தான் குழந்தை பெற்றுக் கொள்கிறோம் என்றால் குழந்தை பிறந்தவுடன் உடலுறவை நிறுத்திக்கொள்கிறோமா? இல்லையே!


ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்வது தான் இயற்கை என்றால் பிரம்மச்சரியம் மேற்கொள்ள விரும்புபவர்களை, ஏன் இயற்கைக்கு முரணாக கருதுவதில்லை? பிரம்மச்சரியம் என்பதை ஒழுக்கமாக கருதும் நாம் ஓரினச்சேர்கையை யதார்த்தமாக கருத வேண்டும். மிக முக்கியமான விடயம் அவர்களை கேலி செய்யகூடாது, தொந்தரவு செய்யகூடாது. தன்பால் ஈர்ப்பு என்பது இயற்கை என்று புரிந்துணர்ந்து அவர்களை சமமாக மதிக்க வேண்டும், இயல்பாக பழக வேண்டும்.

மரபணு அடிப்படையில் தன்பால் ஈர்ப்பு இல்லாமல் வெறும் கேளிக்கை சிந்தனையிலோ, ஒருவிதமான கிளுகிளுப்பு மனப்பான்மையிலோ இதில் ஈடுபடுவது தான் இயற்க்கைக்கு முரணானது. இதை முழுக்க முழுக்க இயல்பாகவே பாவிக்க தொடங்கவேண்டும், ஏனெனில் அது இயல்பானது தான். அதை விழாவாக கொண்டாடுவதோ, ஊடகங்கள் இதை பெரிதாக்கி காட்டி பரபரப்பாக்குவதோ, இதில் காசு பார்ப்பதோ தேவையற்றதும் குற்றமும் ஆகும். ஆண் பெண் பாலியல் குற்றங்கள் போலவே தான் இதிலேயும் பாலியல் குற்றங்கள் இருக்கிறது. வற்புறுத்துதல் இருக்கிறது. பலாத்காரம் இருக்கிறது. ஒரு தன்பால் ஈர்ப்பு கொண்டவர் எதிர்பாலின ஈர்ப்பு கொண்டவரை பலாத்காரம் செய்வது குற்றம் தான். அதே போல எதிர்பாலின விருப்பம் கொண்டவரும் தன்பாலின விருப்பம் கொண்டவரின் உணர்வை புரிந்துகொள்ளாமல் பலாத்காரம் செய்கிறார்கள். இதுபோன்ற குற்றங்களை தடுப்பது மிக அவசியமாகும்.

இதற்கான தீர்வு புரிதல் தான். பாலின புரிதல், பாலுணர்வு புரிதல், பாலின்ப புரிதல் ஏற்பட வேண்டும். எனவே தன் பாலின, இருபாலின விருப்பம் கொண்டவர்களை எதிர்பாலின ஈர்ப்பு கொண்டவர்கள் நம்மை போன்றே இயல்பானவர்கள் என்பதை புரிந்துகொண்டு கேலி செய்யாமல், ஒதுக்காமல் நட்பு பாராட்டி வாழ கற்றுக்கொள்வோம்.

---

## அட்டைப் பூச்சி



இரத்தத்தினும் விலைமதிப்பற்ற
நேரத்தை உறிஞ்சுகிறது
கைபேசி
கையிலும் சட்டைப் பையிலும்
அட்டைப் பூச்சியாய் ஒட்டிக்கொண்டு ...

– ச. அன்பரசு

# எது சுதந்திரம்?

பட்டினியில் உறையும் மக்களுக்கு
இலவசமாக பர்கர் கொடுத்தோம்
அதுவா சுதந்திரம்?

பட்டினியின் தாக்கம் அறிந்து வேரோடு
சாய்த்திருந்தோமானால்
அது பசியின் சுதந்திரம்!!..

ஆணுக்கு நிகராக புகையிலையேந்தி
பெண்ணியம் பேசிடும் ஒரு சனம்
அதுவா சுதந்திரம்?

பாரதியின் கனவு பெண்ணாக உருமாறி
களைந்தார்களேயானால்
அது பெண்ணியத்தின் சுதந்திரம்!!..

உழவனின் சுமையறிந்து கவலை தீர்க்க
பயிர்க்கடன் வழங்கிட்டோம்
அதுவா சுதந்திரம்?

கடன் வாங்க தள்ளப்பட்ட சூழலை
உணர்ந்தோமானால்
அது உழவுக்கான சுதந்திரம்!!..

காசோலை மனம் கிடைத்து தேர்தலின்
முடிவை எட்டினோம்
அதுவா சுதந்திரம்?

மக்களாட்சியின் மகத்துவம்
சிறார்களுக்கும் புகட்டினோமானால்
அது ஜனநாயகத்தின் சுதந்திரம்!!..

தியாகிகளின் சாதியை கண்டறிந்து
உயர்த்திப்பிடிக்கும் ஒரு சனம்
அதுவா சுதந்திரம்?

வேறுபாட்டை விடுத்து அவர்தம்
எண்ணங்களை உயர்த்தினோமானால்
அது தீண்டாமையின்
சுதந்திரம்!!..

பிறர் வாய்ச்சொல்
எண்ணி தன் நலம்
மறைத்திடுவர் ஒரு
சனம்
அதுவா சுதந்திரம்?



த.வா.அஜய்பிரசாத்

தன்னம்பிக்கையின்
தூணாய் உறுதி பூண்டு
எண்ணியவற்றை முடித்திட்டால்
அது தனி மனித சுதந்திரம்!!..

இவற்றில் இருப்பது சில, இழந்தது பல!
கைகோர்ப்போம் நிரந்தர சுதந்திரம் நோக்கி!!!

# மருத்துவ அனுபவம்

5 ஆண்டுகளாக சர்க்கரை நோய்க்கு மருந்து சாப்பிடுகிறேன் என்று எங்களிடம் ஒருவர் வந்தார். அவருக்கு பேதி மருந்து கொடுத்து வயிற்றை சுத்தம் செய்தோம். உணவை மென்று உமிழ் நீருடன் கலந்து அனுப்புங்கள், உணவுகிடையில் தண்ணீர் குடிக்காதீர்கள் என்று கூறினோம். அவரும் அதை சரியாக கடைபிடித்துள்ளார். ஆங்கில மாத்திரைகளை சாப்பிடவில்லை. மீண்டும் எங்களை சந்தித்தபோது அவர் கூறியது, மலம் காலையில் கழிக்கிறேன். ஆனால் குறைவாக வருகிறது.

சில நபர்கள் மலம் சரியாக போகவில்லை மருத்துவம் சரியில்லை என்று வேறு

மருத்துவரை தேடி சென்று விடுவார்கள். இவர் அப்படியில்லாமல் எங்களிடம் கூறினார் முன்பை விட இப்போது உடல்நிலை எப்படி உள்ளது என்று கேட்டோம். மயக்கம் இல்லை, உடலில் சோர்வு இல்லை என்று கூறினார். இதிலிருந்து என்ன தெரிகிறது, உணவு முழுமையாக ஜீரணித்து சத்துக்களை எடுக்காமல் வெளியேறியிருக்கிறது. இப்போது சத்துக்களை எடுத்துவிட்டு சக்கை மட்டும் வெளியேறுவதால் மலம் குறைவாகவும் உடலில் ஆரோக்கியமும் தெரிகிறது. எந்த மருத்துவத்திற்கு நாம் சென்றாலும் அங்கே நம் நோய் முழுமையாக குணமடையும் என்ற 100% நம்பிக்கையுடன் செல்லவேண்டும். நாம் முன்பு கேள்விப்பட்ட கருத்து திணிப்புகளோடு செல்ல கூடாது. மருத்துவர்கள் நம்மிடம் வரும் நோயாளிகள் முழுமையாக குணமடைய வேண்டும் என்று தான் மருந்தை கொடுப்பார்கள். அதுவும் சித்த மருத்துவர்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பு இல்லாததால் அவர்கள் கடவுளிடம் சரணாகதியாய் தன்னை ஒப்படைத்து தான் அந்த மருந்தை தயாரிப்பதிலிருந்து கொடுப்பது வரைக்கும் செய்வார்கள்.

ஒரே மருந்து ஒரே நோய்க்கு ஒரு சிலருக்கு உடனே குணமாகிறது ஒரு சிலருக்கு குணமடைய காலதாமதமாகிறது. இன்னும் ஒரு சிலருக்கு குணமடைவதேயில்லை. இதற்கு காரணம் மருந்திலும் குறையில்லை. மருத்துவரிடமும் குறையில்லை. அதாவது மருத்துவரிடமும் மருந்துடனும் பொருந்த வேண்டும். இணையவேண்டும். ஒத்திசைவாக வேண்டும்.

உதாரணம் கூறுகிறேன். ஒரு பெண் என்னிடம், நான் 48 நாள் அருகம்புல் சாறு குடித்தேன். 1% மாற்றம்கூட தெரியவில்லை என்றார். நான் எப்படி சாப்பிட்டீர்கள் என்று கேட்டேன். அருகம்புல் சாற்றை ஒரு டம்ளரில் எடுத்துக்கொண்டு மறுகையில் வெல்லம் வைத்து கொள்வேன். அச்சாற்றை தொண்டையில் நாக்கின் அடியில் ஊற்றி விட்டு டபக்கென்று வெல்லத்தை போட்டு கொள்வேன் என்றார்.



ராணிச்சந்திரன்
மன்னார்குடி

அருகம்புல் சாறுடன் நீங்கள் ஒன்றாக மாட்டீர்கள். ஆனால் அருகம்புல் உங்களுக்கு நல்லது செய்ய வேண்டுமா? அருகம்புல் சாறை வாயில் வைத்து சுவைத்து அனுப்பினால் அதோடு ஒன்றாவீர்கள். அதோடு இணக்கம் இசைவு ஏற்படும்போது அது உங்களோடு இணைந்து உங்களுக்கு தேவையானதை செய்யும். சித்தர்கள், மகான்கள் வரைக்கும் யாரை குணப்படுத்தினார்கள், யாருக்கு அருள்புரிந்தார்கள்? அவர்களை நம்பினவர்கள், பொருந்தியவர்கள் ஒதிசைவானவர்களுக்கு தான் நோய் குணமானது. அருள் கிடைத்தது. இயேசு நாதர் ஹீலிங் ஏன் அனைவரையும் குணப்படுதவில்லை? சாய்பாபா விபூதி ஏன் அனைவரையும் குணப்படுதவில்லை? மருத்துவம் குணப்படுத்துதல் நம்பியவர்களுக்கும் எற்பவர்களுக்கும் தான் 100% கிடைக்கும். நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைதீர்ப்பு.

எந்த ஒன்றிலும் நம்பிக்கை வையுங்கள். விளக்கம் கிடைக்கும். முழுமைப்பேறு அடையலாம். வாழ்க வளமுடன்.

**- ராணிச்சந்திரன்**

## பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal மன்னையின் மைந்தர்கள்